# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2430/SCIC/2024**

திருமதி M. சுமதி புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி வருவாய் அலுவலர், ....... பொதுஅதிகார அமைப்பு
மண்டலம் - 11, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.33, ஆற்காடு சாலை,
வளசரவாக்கம், சென்னை 600 087

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **04.03.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 08.04.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 13.05.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / உதவி வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 04.03.2024 தேதியிட்ட மனுவில் சென்னை மாநகராட்சி மண்டலம் 11 வளசரவாக்கம் லட்சுமிநகர் பகுதிக்கு 25.01.2024 அன்று ஏரியா சபை குறைதீர் கூட்டத்தில் லட்சுமிநகர் குடியிருப்போர் சங்கம் சார்பாக சென்னை மாநகராட்சி, மண்டலம் 11 உதவி ஆணையருக்கு தெருவாரியான அடிப்படை கட்டணம் குடியிருப்பு மற்றும் வணிகவளாகங்களுக்கு சொத்துவரி குறைக்க வேண்டி விண்ணப்பம் அளித்ததாகவும், அந்த விண்ணப்பத்தின் மீது

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை தகவலாக வழங்குமாறும் கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. அவரது சார்பாக திரு டில்லிகுமார் ஆஜரானார் ஆனால் அவர் அனுமதி கடிதம் ஏதும் மனுதாரரிடமிருந்து பெற்றுவரவில்லையென்பதை ஆணையம் பதிவு செய்கிறது. பொதுத் தகவல் அலுவலர் சார்பில், திரு B. சாம்பசிவம், வரிமதிப்பீட்டாளர், மண்டலம் 11, பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு, 30.05.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் சார்பில் இன்று விசாரணைக்கு ஆஜரான நபரான திரு டில்லிகுமாரும் மேற்குறிப்பிட்டவாறு தகவல்கள் தனக்கு கிடைக்கப்பெற்றதாக விசாரணையின்போது தெரிவித்தார். ஆனால் அதில் லட்சுமிநகர் ஏரியா குடியிருப்பு சங்கம் சார்பில் சொத்துவரி குறைப்பு சம்மந்தமாக 25.01.2024 தேதியிட்டு அளிக்கப்பட்ட மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் ஏதும் தங்களுக்கு வழங்கப்படவில்லையென்று தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரர் கோரிய விவரங்களுக்கு அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் சென்னை மாநகரில் சொத்துவரி சம்மந்தமாக அரசாணை எண்.53 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் 30.03.2022 மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.63, நாள் 30.05.2022ன்படி 1/2022-23 முதல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் இவ்விவரங்கள் அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியின். இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் ஒரு வாய்ப்பளிக்கப்பட்டும், அவர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. **எனவே, இத்துடன் இந்த புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2430/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
உதவி வருவாய் அலுவலர்,
மண்டலம் - 11, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.33, ஆற்காடு சாலை,
வளசரவாக்கம், சென்னை 600 087

**மனுதாரர்**

திருமதி M. சுமதி,
ம.எண்.3, க.எண்.19, 1வது பிரதான சாலை,
லட்சுமிநகர், போரூர்,
மதுரவாயல் வட்டம்,
சென்னை 600 116

TK/PS